Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# ஹலோ மிரர் மெட்ராஸ்

hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 2 சென்னை | தினசரி | 4 பக்கம் திங்கள்கிழமை, நவம்பர் 07, 2022 4 பக்கங்கள் ரூ.2/- இதழ் 116

## ராகுல்காந்தி - பிரதமர் மோடி இடையே நேருக்கு நேர் விவாதம் நடத்த காங்கிரஸ் வலியுறுத்தல்





சென்னை, நவம்பர் 07 2022: நாட்டைப் பாதிக்கும் பிரச்சினைகள் குறித்து பிரதமர் நரேந்திர மோடி மற்றும் ராகுல் காந்தி இடையே நேருக்கு நேர் விவாதம் நடத்தப்பட வேண்டும் என்று காங்கிரஸ் தரப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

கன்னியாகுமரியில் இருந்து செப்டம்பர் 7-ந் தேதி தொடங்கிய காங்கிரஸ் எம்.பி.ராகுல் காந்தியின் இந்திய ஒற்றுமை பயண பாத யாத்திரை, தெலுங்கானா மாநிலத்தை தாண்டி இன்று இரவு 9 மணி அளவில் மகாராஷ்டிரா மாநிலம் நாந்தேட் மாவட்டத்தில் உள்ள தெக்லூரை அடைகிறது. அந்த மாநிலத்தில் மட்டும் 14 நாள் இந்த பாத யாத்திரை நடைபெறுகிறது.

விவாதம் நடத்த வேண்டும்

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய மகாராஷ்டிர காங்கிரஸ் தலைவர் நானா படோல், அரசியலமைப்பு மற்றும் ஜனநாயக விழுமியங்களைப் பாதுகாப்பதே பாத யாத்திரையின் நோக்கம். கடந்த 8 ஆண்டுகளில், நாடு ஊழல், பயம் மற்றும் வறுமையால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், நாட்டைப் பாதிக்கும் பிரச்சினைகள் குறித்து பிரதமர் நரேந்திர மோடி மற்றும் ராகுல் காந்தி இடையே நேருக்கு நேர் விவாதம் நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

இந்த நிலையில், ராகுல் காந்தி வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், பாஜகவின் இரட்டை என்ஜின் என்ற வஞ்சகத்தில் இருந்து குஜராத் மக்களை காப்பாற்றுவோம் என்று தெரிவித்துள்ளார். மாற்றத்திற்கான திருவிழாவை குஜராத்தில் கொண்டாடுவோம். ரூ.500க்கு சமையல் எரிவாயு சிலிண்டர், 10 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு, ரூ.3 லட்சம் வரையிலான விவசாயக்கடன்கள் தள்ளுபடி போன்ற காங்கிரஸ் கட்சியின் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும் என்று ராகுல் காந்தி குறிப்பிட்டுள்ளார்.

## டெல்லியில் தொடர்ந்து மோசமாகி வரும் காற்றின் தரம்: மக்கள் கடும் அவதி



சென்னை, நவம்பர் 07 2022: தலைநகர் டெல்லியில் காற்றின் தரம் தொடர்ந்து மோசமடைந்து வருகிறது. இதனால் மக்கள் கடும் அவதிக்கு ஆளாகி வருகின்றனர்.

டெல்லியில் சமீப நாட்களாக காற்றின் தரம் மிக மோசமடைந்து காணப்படுகிறது. இதனால், மக்கள் வெளியே செல்வதில் சிரமம் ஏற்பட்டு உள்ளது. சுவாச மற்றும் பார்வை கோளாறுகள் ஏற்படும் சாத்தியங்கள் அதிகரித்து உள்ளன. மருத்துவமனைகளில் சேருவோரின் எண்ணிக்கையும் அதிகரித்து உள்ளது.

இந்த நிலையில், டெல்லியில் காற்று தர குறியீட்டு அளவில் காற்றின் தரம் 326 என்ற அளவில் இன்று காலை பதிவாகி உள்ளது. இது மிக மோசம் என்ற பிரிவில் உள்ளது. கடந்த வாரம் கடுமையான பிரிவில் 3 நாட்களுக்கு நீடித்த இந்த நிலைமை சற்று மாறியுள்ளது. தொடர்ந்து டெல்லியில் காற்றின் தரம் மோசமடைய கூடிய நிலைமை ஏற்படும் என்றும் கணிக்கப்பட்டு உள்ளது.

இதேபோன்று, டெல்லி என்.சி.ஆர். பகுதியில் தொடர்ந்து காற்றின் தரம் மோசமடைந்து காணப்படுகிறது. அதன் ஒரு பகுதியாக உள்ள நொய்டாவில் காற்று தர குறியீடு 356 ஆக உள்ளது. குருகிராமில் காற்று தர குறியீடு 364 என தொடர்ந்து மிக மோசம் பிரிவிலேயே உள்ளது.

காற்று தர குறியீடு பூஜ்யம் முதல் 50-க்குள் இருப்பது நலம் என்றும் 51 முதல் 100 என்பது மித அளவிலும், 101 முதல் 150 வரை என்பது உடனடியாக பாதிப்பிற்கு இலக்காகும் குழுக்களுக்கு சுகாதாரமற்றது என்றும், 151 முதல் 200 வரை அனைத்து தரப்பினருக்கும் சுகாதாரமற்றது என வகைப்படுத்தப்பட்டு உள்ளது.

201 முதல் 300 வரை அதிக பாதிப்பு ஏற்படுத்தும் சுகாதாரமற்ற நிலை மற்றும் 301 முதல் 500 வரை மனித சுகாதாரத்திற்கு பெரிய அளவில் தீங்கு விளைவிக்கும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

உலக அளவில் காற்று தரம் பற்றி மதிப்பீடு செய்து காற்று மாசு பற்றி குடிமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும், உதவிடவும் வகையில் 2007-ம் ஆண்டு உலக காற்று தர குறியீடு அமைப்பு தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இந்த அமைப்பு கடந்த மாதம், ஆசிய நாடுகளில் அதிக மாசடைந்த நகரங்கள் பற்றி ஆய்வு செய்து டாப் 10 நகரங்களின் பட்டியலை வெளியிட்டு உள்ளது. இதில், இந்தியாவில் மட்டும் 8 நகரங்கள் டாப் 10-ல் இடம் பெற்று அதிர்ச்சி ஏற்படுத்தியது.

இந்த பட்டியலில் முதல் இடத்தில் குருகிராம் நகரம் உள்ளது. இதன் காற்று தர குறியீடு 679 புள்ளிகள் என்ற அளவில் உள்ளது. இதனை தொடர்ந்து, ரேவாரி நகர் அருகே உள்ள தருஹெரா (543) மற்றும் பீகாரில் உள்ள முசாபர்பூர் (316) ஆகிய நகரங்கள் உள்ளன.

இது தவிர, லக்னோவுக்கு உட்பட்ட டாகடோர், பெகுசராய்க்கு உட்பட்ட டி.ஆர்.சி.சி. ஆனந்த்பூர், திவாஸ்க்கு உட்பட்ட போபால் சவுரஹா, கல்யாணுக்கு உட்பட்ட கதக்பாத், சாப்ராவுக்கு உட்பட்ட தர்சன் நகர் ஆகிய 5 நகரங்கள் அடுத்தடுத்து பட்டியலில் இடம் பெற்று உள்ளன. இவை அனைத்தும் காற்று தர குறியீட்டில் 200-க்கும் கூடுதலான புள்ளிகளுடன் உள்ளன. இந்த வரிசையில் பெருமளவில் வடமாநிலங்கள் இடம் பெற்று உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## சென்னை - மைசூர் வந்தே பாரத் ரயில்: சோதனை ஓட்டம் இன்று தொடங்கியது



சென்னை, நவம்பர் 07 2022: தென்னிந்தியாவில் முதன்முறையாக சென்னை - மைசூர் இடையேயான வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயிலின் சோதனை ஓட்டம் இன்று காலை தொடங்கியது.

சென்னை பெரம்பூர் ஐசிஎஃப்பில் தயாரிக்கப்பட்ட வந்தே பாரத் ரெயில் நவம்பர் 11ஆம் தேதி முதல் சென்னை - மைசூர் இடையே சேவையை தொடங்க உள்ளது. இந்நிலையில் இன்று காலை அதற்கான சோதனை ஓட்டம் தொடங்கியுள்ளது. சென்னையிலிருந்து பெங்களூர் வழியாக மைசூருக்கு ரயில் சேவைகள் இருந்தாலும் வந்தேபாரத் ரயில் மிக விரைவாக பயண தூரத்தை கடக்கும்.

வாரத்தில் 6 நாட்கள்

வாரத்தில் புதன்கிழமை தவிர மற்ற நாள்களில் சென்னை - மைசூர் வந்தேபாரத் ரயில் சேவை இருக்கும். காலை 5.50 மணிக்கு சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் கிளம்பும் ரயில், மதியம் 12.30 மணிக்கு மைசூரை சென்றடையும். 504 கிலோ மீட்டர் தூரத்தை மணிக்கு 76 கிமீ வேகத்தில் கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ரயில் பெங்களூர் தவிர வேறு எந்த ஊரிலும் நிற்காது. மதியம் 1.30 மணிக்கு மைசூரில் மீண்டும் கிளம்பும் ரயில், இரவு 7.30 மணிக்கு சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தை வந்தடையும் என்று கூறப்படுகிறது. மொத்த தூரமான 504 கி.மீ தொலைவை 6 மணி நேரம் 30 நிமிடத்தில் கடக்கும் என்று தகவல் தெரிவித்துள்ளது.

நவம்பர் 11ஆம் தேதி முதல் இதன் சேவை தொடங்க உள்ள நிலையில், இன்று சோதனை ஓட்டம் ஆரம்பமாகியுள்ளது. இன்று காலை கிளம்பி மைசூரை நோக்கி சென்றுள்ள ரயில் இரவு சென்னை திரும்பும். தென் இந்தியாவிலிருந்து செல்லும் முதல் வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயில் இது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் நாட்டின் 5 வது வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயில் இது என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரபலங்கள் பெயரில் உள்ள போலி டுவிட்டர் கணக்குகள் நிரந்தரமாக நீக்கம்: எலான் மஸ்க் அதிரடி நடவடிக்கை




சென்னை, நவம்பர் 07 2022: டுவிட்டரில் பிரபலங்கள் பெயரில் உள்ள போலி கணக்குகள் நிரந்தரமாக நீக்கப்படும் என்று எலான் மஸ்க் அதிரடியாக தெரிவித்துள்ளார். டுவிட்டரில் அரசியல், விளையாட்டு, சினிமா உள்பட பல்வேறு துறைகளை சேர்ந்த பிரபலங்கள் கணக்கு வைத்துள்ளனர். அந்த பிரபலங்களின் பெயர்களில் டுவிட்டரில் பல்வேறு போலி கணக்குகளும் உள்ளன. இந்த போலி கணக்குகள் டுவிட்டரின் நம்பகத்தன்மையை வலுவிழக்க வழிவகுக்கிறது. அதேவேளை, இந்த போலி டுவிட்டர் கணக்குகளை கண்டுபிடித்து நீக்க டுவிட்டர் நிறுவனம் பல்வேறு வழிகளை கையாண்டு வருகிறது. அந்த வகையில், போலி கணக்குகள் கண்டறியப்பட்டாலும் அந்த கணக்குகளும் முதலில் எச்சரிக்கை விட்டு அதன் பின்னரே அந்த போலி கணக்கு நீக்கப்படுகிறது.

இந்நிலையில், டுவிட்டர் பயனாளர்கள் போலி டுவிட்டர் கணக்கை உருவாக்கி ஆள்மாறாட்டத்தில் ஈடுபட்டால் அந்த கணக்குகள் எந்த வித எச்சரிக்கையும் விடுக்கப்படாமல் நிரந்தரமாக நீக்கப்படும் என்று எலான் மஸ்க் அதிரடியாக தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக எலான் மஸ்க் தனது டுவிட்டர் பக்கத்தில் இன்று வெளியிட்டுள்ள பதிவில், முன்னோக்கி செல்கையில், போலி கணக்கு என்று தெளிவாக குறிப்பிடாமல் ஆள்மாறாட்டத்தில் ஈடுபடும் பயனாளர்களின் டுவிட்டர் கணக்குகள் எச்சரிக்கையின்றி நிரந்தரமாக நீக்கப்படும். கடந்த முறை கணக்கு நீக்கப்படுவதற்கு முன்பாக நாங்கள் எச்சரிக்கை அளித்தோம். ஆனால், தற்போது நாங்கள் அடையாள சரிபார்ப்பு நடைமுறையை விரிவுபடுத்தி விட்டதால் எச்சரிக்கைகள் எதுவும் அளிக்கப்படாது. இது டுவிட்டரின் 'டுவிட்டர் புளூ' வசதியை பெறுவதற்கான தெளிவான நிபந்தனையாகும்' என தெரிவித்துள்ளார்.

## பாஜக அமைச்சரவையில் வெளிப்படைத் தன்மை இல்லை: சுப்பிரமணியசாமி குற்றச்சாட்டு



சென்னை, நவம்பர் 07 2022: பாரதீய ஜனதா அமைச்சரவையில் வெளிப்படைத் தன்மை இல்லை என்று சுப்பிரமணிய சாமி டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

'உச்சநீதிமன்றத்தின் கொலிஜியம் முறையில் எனக்கு திருப்தி இல்லை. பொது மக்கள், வழக்கறிஞர்கள், நீதிபதிகள் நினைப்பதை பற்றி தான் நான் பேசுகிறேன். ஆனால் தற்போதைய கொலிஜியம் முறையில் நீதிபதிகள் தங்களுக்கு தெரிந்தவர்களை பரிந்துரை செய்கின்றனர். இது தவறானது என்று இந்திய சட்டத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜூ கூறியது பெரும் விவாதத்துக்கு உள்ளாகி உள்ளது.

சுப்பிரமணிய சாமி குற்றச்சாட்டு

இந்நிலையில் பாஜகவின் மூத்த தலைவரான சுப்பிரமணிய சுவாமி இதுபற்றி கருத்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக சுப்பிரமணிய சுவாமி தனது டுவிட்டர் பக்கத்தில், "மத்திய சட்டத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜூ உச்சநீதிமன்றத்தின் கொலிஜியம் வெளிப்படைத்தன்மையின்றி உள்ளது என்கிறார். முன்னாள் மத்திய சட்டத்துறை அமைச்சர் என்ற முறையிலும், நீதிமன்றங்களில் 100க்கும் அதிகமான வழக்குகளில் வாதிட்டவர் என்ற முறையிலும் நான் ஒன்றை கூறுகிறேன்.

மோடி அமைச்சரவை வெளிப்படை தன்மையின்றி மிகவும் தெளிவற்ற நிலையில் உள்ளது என்பதை என்னால் கூற முடியும். இதனை கிரண் ரிஜிஜூ முதலில் சரிசெய்ய வேண்டும். இதனை நீங்கள் செய்யும்போது பதவி நீக்கம் செய்யப்பட்டால் என்னை குறைக்கூறக் கூடாது" என தெரிவித்துள்ளார்.

இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்
ALL ONLINE SERVICES

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# கவிஞர் வைரமுத்துவின் கள்ளிக்காட்ட இதிகாசம் ஆங்கில மொழிபெயர்ப்பு நூல் துபாய் சர்வதேச மாநாட்டில் வெளியிடப்படுகிறது

சென்னை, நவம்பர் 07 2022: கவிஞர் வைரமுத்துவின் கள்ளிக்காட்டு இதிகாசம் சாகித்ய அகாடமி விருது பெற்ற நாவலாகும். 23 மொழிகளில் சாகித்ய அகாடமி அதை மொழிபெயர்த்து வருகிறது. இந்தி - உருது -மலையாளம் - கன்னடம் ஆகிய மொழிகளைத் தொடர்ந்து இப்போது ஆங்கில மொழிபெயர்ப்பு வெளிவந்திருக்கிறது; கீதா சுப்ரமணியம் மொழிபெயர்த்திருக்கிறார்.




துபாயில் நவம்பர் 9, புதன்கிழமை அட்லாண்டிஸ் ஹோட்டலில் நடைபெறும் 'ரைஸ்' மாநாட்டில் 'தி சாகா ஆஃப் தி காக்டஸ் லேண்ட்' என்ற கள்ளிக்காட்டு இதிகாசத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பு நூல் வெளியிடப்படுகிறது. உலகத் தொழில் முனைவோர் பங்குபெறும் இந்த மாநாட்டில், கவிஞர் வைரமுத்து நூலை வெளியிட 32நாடுகளின் பிரதிநிதிகள் பெற்றுக்கொள்கிறார்கள்.

மாநாட்டின் தலைவர் தொழிலதிபர் சிவகுமார், ரைஸ் அமைப்பின் நிறுவனத் தலைவர் அருட்தந்தை ஜெகத் கஸ்பர், துணைத் தலைவர்கள் ஆல்பிரட் பெர்க்மென்ஸ், ஜோஸ் மைக்கேல் ராபின், சாகுல் ஹமீது, பஷீர் கான் ஆகியோர் மாநாட்டு ஏற்பாடுகளைச் செய்துவருகிறார்கள்.

# 'பெடியா' படத்திலிருந்து பரவசமூட்டும் காதல் மெல்லிசை பாடல் 'எனக்காய் பிறந்தவளே நீயா' வெளியீடு

## 'பெடியா' திரைப்படத்தை நவம்பர் 25 அன்று தமிழகமெங்கும் பிரமாண்டமான முறையில் ஸ்டுடியோ கிரீன் வெளியிடுகிறது

சென்னை, நவம்பர் 07 2022: மேடாக் பிலிம்ஸ் தயாரிப்பில் ஜியோ ஸ்டுடியோஸ் மற்றும் தினேஷ் விஜன் வழங்கும், அமர் கௌஷிக் இயக்கும் 'பெடியா' திரைப்படத்தின் பரபரப்பான டீசர் அனைவரின் பேசுபொருளான நிலையில், அப்படத்திலிருந்து 'எனக்காய் பிறந்தவளே நீயா' எனும் பாடல் தற்போது வெளியாகி உள்ளது. இந்த மெல்லிசை காதல் பாடலை மிகவும் சிறப்பான முறையில் கார்த்திக் பாடியுள்ளார். அழகான பாடல் வரிகளும் உணர்வுப்பூர்வமான இசையும் கேட்பவர்களை பரவசமடைய வைக்கின்றன. 'எனக்காய் பிறந்தவளே நீயா'




பாடலை கேட்கும் போது அது எவ்வாறு படமாக்கப்பட்டிருக்கும் என்ற ஆவலும் திரையில் காண வேண்டும் என்ற ஆர்வமும் மேலிடுவதை தவிர்க்க முடியவில்லை. சச்சின் - ஜிகர் இசையமைத்துள்ள இப்பாடலின் வரிகளை அமிதாப் பட்டாச்சாரியா மற்றும் எஸ். சுனந்தன் எழுதியுள்ளனர். பாடலின் ஒலி வடிவம் தற்போது வெளியாகி உள்ள நிலையில் திங்கட்கிழமை அன்று முழு பாடலும் வெளியாகிறது. ஜியோ ஸ்டுடியோஸ் மற்றும் தினேஷ் விஜன் வழங்கும், மேடாக் பிலிம்ஸ் தயாரிப்பில், வருண் தவான், கீர்த்தி சனோன், தீபக் தோப்ரியால் மற்றும் அபிஷேக் பேனர்ஜீ நடித்துள்ள 'பெடியா' நவம்பர் 25 அன்று தமிழ், ஹிந்தி மற்றும் தெலுங்கு ஆகிய மொழிகளில் பான்-இந்தியா படமாக 2டி மற்றும் 3டியில் வெளியாகவுள்ளது. இப்படத்தை தமிழ்நாடு முழுவதும் ஸ்டுடியோ கிரீன் பிரமாண்டமான முறையில் வெளியிட உள்ளது.

# திரைப்பட இயக்குனர் எழுத்தாளர் ராசி அழகப்பன் அவர்களின் "சந்திப்பில் கிடைத்த சிகரங்கள்" நூல் வெளியீட்டு விழா வெகு விமரிசையாக நடைபெற்றது

சென்னை, நவம்பர் 07 2022: கவிப்பேரரசு வைரமுத்து அவர்களை நிறுவனர் மற்றும் தலைவராகக் கொண்டு செயல்பட்டு வரும் வெற்றித் தமிழர் பேரவையின் புதுச்சேரிப் பிரிவின் சார்பாக புதுவைத் தமிழ் சங்க அரங்கத்தில் திரைப்பட இயக்குனர் எழுத்தாளர் ராசி அழகப்பன் அவர்களின் "சந்திப்பில் கிடைத்த சிகரங்கள்" நூல் வெளியீட்டு விழா வெகு விமரிசையாக நடைபெற்றது. புதுச்சேரி, வெற்றித் தமிழர் பேரவையின் அமைப்பாளர் தீந்தமிழ்த் தென்றல் தி.கோவிந்தராசு அவர்களின் வரவேற்புரையோடு நிகழ்ச்சி தொடங்கியது. புதுச்சேரி அரசின் மேனாள் சட்டப்பேரவைத் தலைவர் தகைமிகு வே..பொ. சிவக்கொழுந்து அவர்கள் இந்நிகழ்ச்சிக்குத் தலைமை ஏற்று தலைமையுரை ஆற்றினார். எழுத்தாளர் ராசி அழகப்பனின் சந்திப்பில் கிடைத்த சிகரங்கள் நூலினைப் புதுச்சேரி அரசின் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தகைமிகு க.லட்சுமி நாராயணன் அவர்கள் வெளியிட்டுச் சிறப்புரை வழங்கினார். மாண்புமிகு அமைச்சர் தமது சிறப்புரையில்




எழுத்தாளர் ராசி.அழகப்பன் அவர்களின் கடந்த நாற்பதாண்டுக் கால கலை, இலக்கியப் பணிகளைப் பாராட்டியதோடு நூலில் இடம்பெற்றுள்ள தலைசிறந்த ஆளுமைகளுடனான தமது நட்பினைச் செய்நன்றியோடு நூலாசிரியர் பதிவுசெய்துள்ள பண்பினை வெகுவாகப் புகழ்ந்துரைத்தார். கவிப்பேரரசு தலைமையில் இயங்கும் வெற்றித் தமிழர் பேரவையின் செயல்பாடுகள் தம்மை வெகுவாகக் கவர்ந்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

நூலினைப் பெற்றுக் கொண்டு பைந்தமிழ்க் காவலர் தகைமிகு வீர. பாலகிருட்டிணன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். நூலின் அறிமுக உரையினை வழங்கிய நற்றமிழ் நாவலர் முனைவர் நா.இளங்கோ அவர்கள் தமிழில் அதிக முக்கியத்துவம் பெறாத கட்டுரை என்ற இலக்கிய வகைமையை ஆசிரியர் திறம்படக் கையாண்டுள்ள சிறப்பையும் பல்வேறு ஆளுமைகளைப் பதிவுசெய்யும் இந்நூற் கட்டுரைகளின் ஊடாகத் தமது வாழ்க்கை வரலாற்றை நுட்பமாக எழுதிச் செல்லும் நேர்த்தியையும் பாராட்டினார்.

விழாவிற்குத் தகைமிகு சு. கோதண்டராமன் ப. காண்டீபன் க. மதன்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பொறிஞர் இரா. தேவதாசு, காவியப் பாவலர் இராமதாசு காந்தி, வேட்டவலம் கவிஞர் முகில்வண்ணன், தகைமிகு ம. வீரட்டீஸ்வரன், தமிழாசிரியர் சின்ன சேகர், பேராசிரியர் செ. குமரன் ஆகியோர் நூலாசிரியரை வாழ்த்திப் பேசினர். நிகழ்ச்சியின் முத்தாய்ப்பாக நூலாசிரியர் ராசி. அழகப்பன் அவர்கள் ஏற்புரை வழங்கினார். அச்சமயம் தமது நாற்பதாண்டுக் காலப் போராட்ட வாழ்க்கையில் பல்லாற்றானும் துணைநின்று என்னை உயர்த்திவிட்ட சிகரங்களை நினைவு கூர்ந்ததில் தாம் பெரிதும் மனநிறைவு எய்தியுள்ளதாக நெகிழ்ச்சியோடு குறிப்பிட்டார். நிறைவாகக் கவிஞர் குமரவேல் பட்டாபி அவர்கள் நன்றியுரை வழங்கினார். தமிழகம் மற்றும் புதுச்சேரியைச் சேர்ந்த கவிஞர்களும் எழுத்தாளர்களும் தமிழ் ஆர்வலர்களும் திரளாக வந்திருந்து நூல் வெளியீட்டு விழாவினைச் சிறப்பித்தனர். புதுச்சேரி வெற்றித் தமிழர் பேரவையின் பொறுப்பாளர்கள் நூல் வெளியீட்டு விழாவினைச் சிறப்பாகத் திட்டமிட்டு அனைத்து ஏற்பாடுகளையும் செய்து விழாவினை வெற்றியடையச் செய்தனர்.

# தெலுங்கில் பிளாக்பஸ்டர் ஹிட்டான ஊர்வசிவோ ராட்சசிவோ ; மகிழ்ச்சியில் இசையமைப்பாளர் அச்சு ராஜாமணி

சென்னை, நவம்பர் 07 2022: அச்சு ராஜாமணி இசையில் வெளியான தெலுங்கில் ஊர்வசிவோ ராட்சசிவோ மிகப்பெரிய வெற்றி

பியார் பிரேமா காதல் தெலுங்கு ரீமேக்கிற்கு இசையமைத்துள்ள அச்சு ராஜாமணி

யுவனின் இசையை கெடுக்காமல் இசையமைத்துள்ளேன் ; அச்சு ராஜாமணி

விஜய் ஆண்டனியின் குறுக்கீடு இருந்ததா..? ; இசையமைப்பாளர் அச்சு ராஜாமணி ஓபன் டாக்

ஓபனாக பேசுவதால் பெரிய இடத்துக்கு போக முடியவில்லை ; இசையமைப்பாளர் அச்சு ராஜாமணி

சோஷியல் மீடியாவை கையாள முடியவில்லை ; இசையமைப்பாளர் அச்சு ராஜாமணி ஓபன் டாக்



தெலுங்கு திரையுலகின் மிக பிரபலமான கீதா ஆர்ட்ஸ் சார்பில், அல்லு அரவிந்த் தயாரிப்பில் தெலுங்கில் உருவாகியுள்ள படம் ஊர்வசிவோ ராட்சசிவோ. அல்லு அர்ஜுனின் தம்பியும் தமிழில் கவுரவம் படத்தில் கதாநாயகனாக நடித்தவருமான அல்லு சிரிஷ் இந்த படத்தில் கதாநாயகனாக நடித்துள்ளார். கதாநாயகியாக துப்பறிவாளன், நம்ம வீட்டு பிள்ளை நாயகி அனு இம்மானுவேல் நடித்துள்ளார். ராகேஷ் சசி இந்தப்படத்தை இயக்கியுள்ளார். கோலிசோடா - 2 கொலையுதிர் காலம் உள்ளிட்ட ஹிட் படங்களுக்கு இசையமைத்த அச்சு ராஜாமணி இந்த படத்திற்கு இசையமைத்துள்ளார். இந்த படம் தமிழில் யுவன் சங்கர் ராஜா தயாரித்து இசை அமைத்த பியார் பிரேமா காதல் படத்தின் தெலுங்கு ரீமேக் ஆக உருவாகி உள்ளது. இந்தியா முழுக்க வெளியான இந்தப்படம் ரசிகர்களிடம் மிகப்பெரிய வரவேற்பை பெற்று பிளாக்பஸ்டர் ஹிட் படமாக மாறியுள்ளது. இந்தப்படத்தின் வெற்றியை கொண்டாடும் விதமாக நவ-6 (நாளை) இந்தப்படத்தின் வெற்றிக்கொண்டாட்டம் ஹைதராபாத்தில் நடைபெற உள்ளது. இந்த நிகழ்வில் தெலுங்கு சினிமாவின் ஐகான் ஸ்டார் என கொண்டாடப்படுபவரும் நாயகன் அல்லு சிரிஷின் சகோதரருமான நடிகர் அல்லு அர்ஜுன் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளார்.

இந்தநிலையில் படம் பிளாக்பஸ்டர் ஹிட் ஆன சந்தோஷத்தில், குறிப்பாக பாடல்களுக்கு ரசிகர்களுக்கு நல்ல வரவேற்பு கிடைத்தவரும் மகிழ்ச்சியில் இருக்கும் இசையமைப்பாளர் அச்சு ராஜாமணி, இந்த படத்தில் பணியாற்றிய அனுபவம் குறித்தும் தனது திரையுலக பயணத்தில் அடுத்தடுத்து தான் பணியாற்றும் படங்கள் குறித்தும் சில சுவாரஸ்யமான தகவல்களை பகிர்ந்து கொண்டார்.

இந்தபடத்திற்கு இசையமைக்கும் வாய்ப்பு வந்த விதம் குறித்து..?

"இந்தப் படத்தின் ஹீரோ அல்லு சிரிஷும் நானும் 2015ல் இருந்தே நெருங்கிய நண்பர்கள். அவர் மூலமாகத்தான் இந்த படத்திற்கு இசையமைக்கும் வாய்ப்பும் என்னை தேடி வந்தது.. அல்லு சிரிஷ் பற்றி சொல்ல வேண்டுமென்றால் அவர் ஒரு தெளிவான மனிதர். கதை தேர்வு செய்வது, நம்முடன் உரையாடுவது என எல்லாவற்றிலும் அவரிடம் ஒரு தெளிவு இருக்கும். நாம் அவரிடம் பேசும்போது கூட முன்கூட்டியே தயாராகிக்கொண்டு பேசும் அளவிற்கு அவரிடம் ஒரு கிளாரிட்டி இருக்கும். அவரது அப்பா அல்லு அரவிந்த் போல தான்அவரும் என்று கூட சொல்லலாம். நாங்கள் இருவரும் பெர்ஷனலாக பேசிக்கொள்ளும் சமயங்களில் கூட கேலி கிண்டல்கள் இருக்காது. அப்போது கூட தேவையான விஷயங்களை மட்டுமே பேசுகிவோம். யுவன் பட ரீமேக் என்பதால் பிரஷர் இருந்ததா..?

பியார் பிரேமா காதல் படத்தை நான் கிட்டத்தட்ட ஐந்து தடவைக்கு மேல் பார்த்துவிட்டேன். இங்கே யுவன் ரொம்ப அழகாக பண்ணியிருக்கிறார். ஆனால் தெலுங்கில் இந்த படத்தை ரீமேக் என பார்க்காமல் ஒரு தனி தெலுங்கு படமாகத்தான் உருவாக்கியுள்ளோம். குறிப்பாக ஒரிஜினலை கெடுத்து விடக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தோம். அதனால் தெலுங்கில் மேக்கிங்கிலும் சரி இசையிலும் சரி இன்னும் கொஞ்சம் மேம்படுத்தி இருக்கிறோம் என்று கூட சொல்லலாம். தமிழில் பயன்படுத்திய எந்த ஒரு இசையையும் இந்தப்படத்தில் தெலுங்கிற்காக நாங்கள் எடுத்துக்கொள்ளவில்லை. தமிழுக்கும் தெலுங்கிற்கும் ரொம்பவே வித்தியாசம் காட்டி இருக்கிறோம்.

இந்த படத்தில் 5 பாடல்கள் இருக்கின்றன. ஏற்கனவே இந்த படத்தில் இரண்டு பாடல்கள் ட்ரெண்டிங்கில் இடம்பிடித்து படத்தின் மீதான எதிர்பார்ப்பை அதிகப்படுத்தின. வானொலிகளில் கூட டாப் பாடல்களில் இடம் பிடித்திருந்தன. இயக்குனர் ராகேஷ் சசியுடன் பணியாற்றிய அனுபவம் குறித்து..?

இந்த படத்தின் இயக்குனர் ராகேஷ் சசி பற்றி சொல்லும் வேண்டுமென்றால் அவருக்கு என்று ஒரு தனி பார்வை இருக்கிறது. அவரது குடும்பத்தினர் கேசட் கடை வைத்து நடத்தியவர்கள் என்பதால் சிறுவயதில் இருந்தே பாடல்கள் மற்றும் இசை சம்பந்தமான ஞானம் அவருக்கு இயல்பாகவே இருக்கிறது. அவருக்கு என்ன தேவை என்பது எனக்கும் தெரிந்துவிட்டதால் அவருடன் இணைந்து பணியாற்றுவது எளிதாக இருந்தது. பாடல்கள், பின்னணி இசை விஷயத்தில் இந்த படத்தில் பணியாற்ற முழு சுதந்திரம் எனக்கு இருந்தது. இந்த படத்தின் பின்னணி இசை சமயத்தில் இயக்குனர் ராகேஷ் சசியும் நிர்வாக தயாரிப்பாளரான பன்னி வாசுவும் எனக்கு ரொம்பவே உற்சாகமும் உந்துதலும் கொடுத்தனர். படத்தின் தயாரிப்பாளரான அல்லு அரவிந்த் கூட "அவன் போக்கில் விட்ருங்க.. அவன் என்ன வேணும்னாலும் பண்ணட்டும்.. அதுல இருந்து வேணும்ங்கிறத நீங்க வாங்கிக்குங்க" என்று பெருந்தன்மையுடன் கூறிவிட்டார். இயக்குனர் மட்டுமல்ல, படத்தின் நாயகன் சிரிஷ் கூட இந்த படத்திற்காக எனக்கு நிறைய இன்புட்ஸ் கொடுத்தார்கள். இந்தப்படத்தில் அல்லு சிரிஷுடன் உங்கள் அனுபவம் ?

சொன்னால் ஆச்சரியப்படுவீர்கள் நானும் சிரிஷும் அமர்ந்து எங்களுக்கு தோணும் போதெல்லாம் இசையில் புதுப்புது ட்யூன்களை எதிர்காலத்தில் பயன்படும் என நிறைய உருவாக்கி வைத்துள்ளோம். அவருடன் இணைந்து பணியாற்றிய அந்த அனுபவம் நன்றாக இருந்தது. சிரிஷை பொருத்தவரை பெரும்பாலும் அவரது தந்தை சொல்வதுபோல ஜூபிலி ஹில்ஸ் பாய் என்பது போலத்தான் இதுவரையிலான படங்களில் நடித்துள்ளார். முதன்முறையாக இந்த படத்தில் ஒரு மிடில்கிளாஸ் பையனாக நடித்துள்ளார். அது உண்மையிலேயே சவாலான விஷயம் தான். ஆனால் தான் ஒரு பெரிய குடும்பத்து பையன் என்பது போன்ற விஷயங்களை எல்லாம் மனதில் ஏற்றிக்கொள்ளாமல் இந்த படத்தில் அழகாக அண்டர்ப்ளே செய்து அந்த கதாபாத்திரத்தில் சிறப்பாக நடித்துள்ளார். நான் பொதுவாக எனக்கு பிடித்த, பிடிக்காத விஷயங்களை ஓபனாக சொல்லி விடுவேன் அதனால்தானோ என்னவோ என்னால் இன்னும் பெரிய இடத்திற்கு போக முடியவில்லை என்று கூட நினைக்கிறேன். ஆனால் இந்த படம் பற்றி ஒப்பனாக சொல்ல வேண்டுமென்றால் அல்லு சிரிஷ் மிகச்சிறப்பாக நடித்துள்ளார். அவருக்கு ஸ்கிரிப்ட் பற்றிய அறிவு நிறையவே இருக்கிறது. அவரது அண்ணன் அல்லு அர்ஜுன் நடித்த ஆர்யா படத்திற்கான ஸ்கிரிப்ட்டை தேர்வு செய்தது கூட அவர் தான். அது மட்டுமல்ல அல்லு சிரிஷுக்கு காமெடி டைமிங் சென்ஸ் நிறைய இருக்கிறது. அதை இந்த படத்தில் இயக்குனர் சரியாக பயன்படுத்தியிருக்கிறார். இந்தப்படத்தில் அல்லு சிரிஷை புதிய நபராக பார்ப்பீர்கள்..

சோஷியல் மீடியாவை விட்டு ஒதுங்கியே இருக்கிறீர்களே..?

இன்றைக்கு பெரும்பாலும் சமூக வலைதளங்கள் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அதில் நிறைய நன்மைகளும் இருக்கத்தான் செய்கின்றன. பல நடிகர்கள், இசையமைப்பாளர்கள் உருவாக சோசியல் மீடியா வழிவகுத்துக் கொடுக்கிறது. ஆனால் எனக்கும் அதற்கும் செட் ஆகலை.. சமூக வலைதளங்களில் எதையும் பெரிதாக ரசிக்க முடியவில்லை. காரணம் ஒரு ரீலுக்கு நூறு பேர் நூறு விதமான மியூசிக் போடுகிறார்கள். ஒரு கட்டத்தில் அதன் சுவாரஸ்யம் குறைந்து அதை ரசிக்க முடியாமல் போய்விடுகிறது.. மேலும் அதில் உள்ளே நுழைந்துவிட்டார் நம்மை ட்ரெண்டிங்கில் வைத்துக்கொள்ள வேண்டுமே என்பதற்காக வேலை பார்க்கவேண்டும்.. அதனால் ஒரு அழுத்தம் இருக்கும். அதற்காகவே நான் ஏதாவது செய்யவேண்டும் என்கிற ஒரு சூழல் ஏற்படும்.. அதனால் அதிலிருந்து ஒதுங்கி இருக்கிறேன் அதுமட்டுமல்ல. ரொம்ப நேரம் மொபைல் போனை பயன்படுத்துவது எனக்கு பிடிக்காது. மேலும் சோசியல் மீடியாவை எனக்கு கையாளும் மனநிலையும் அதற்கான நேரமும் கூட தற்போது என்னிடம் இல்லை. என்னுடைய இந்த எண்ணம் என்னுடைய புத்திசாலித்தனமாகவும் இருக்கலாம்.. இல்லை முட்டாள்தனமாகவும் இருக்கலாம். ஆனால் பிற்காலத்தில் தேவைப்படும்போது சோசியல் மீடியாவில் அதுகுறித்த தெளிவான புரிதலோடு, அதை கையாளும் லாவகத்துடன் அதற்கேற்றபடி என்னை தயார்படுத்திக்கொண்டு நிச்சயம் நுழைவேன்.

தமிழில் கொஞ்சம் இடைவெளி விழுந்துவிட்டது போல தெரிகிறதே..?

தமிழில் விஜய் ஆண்டனி நடித்து வரும் மழை பிடிக்காத மனிதன், அடுத்ததாக நாற்கர போர், சாமான்யன் ஆகிய படங்களுக்கு இசையமைத்து வருகிறேன். அடுத்து கோலி சோடா மூன்றாம் பாகம் பண்ணும் ஐடியாவும் இருக்கிறது. இன்னும் இரண்டு படங்களுக்கு பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. இதில் நாற்கர போர் என்கிற படம் பெரிய அளவில் பேசப்படும். கோலிசோடா-2 படத்திற்கு பிறகு மீண்டும் மழை பிடிக்காத மனிதன் படத்தில் இயக்குனர் விஜய் மில்டனுடன் இணைந்து பயணிக்கிறேன்.. கோலிசோடா-2 படத்தில் பொண்டாட்டி பாடலாகட்டும் பின்னணி இசையாகட்டும் அது மிகப்பெரிய வெற்றி பெற்றதற்கு விஜய்மில்டன் எனக்கு கொடுத்த சுதந்திரமும் முக்கிய காரணம். விஜய் ஆண்டனிக்கு இசையமைத்த அனுபவம் எப்படி இருந்தது..?

அதேபோல மழை பிடிக்காத மாமனிதன் படத்தில் ஒரு ஹீரோவாக விஜய் ஆண்டனிக்கு எப்படி இசையமைத்தால் சரியாக இருக்கும் என்கிற கோணத்தில் தான் பணியாற்றி வருகிறேன். விஜய் ஆண்டனியை பொருத்தவரை ஒரு இசையமைப்பாளர், நடிகர் என்பதை விட மரியாதைக்குரிய மனிதாபிமானமிக்க ஒரு மனிதராகத்தான் நான் பார்க்கிறேன். இதுவரை ஒரு நாள் கூட அவர் என்னிடம் படத்தின் இசை பற்றி பேசியதோ அல்லது குறுக்கீடு செய்ததோ கிடையாது. அவரும் ஒரு இசையமைப்பாளர் என்பதால் இன்னொருவரின் வேலையில் குறுக்கிட்டால் அது எந்தவிதமான எதிர்விளைவுகளை ஏற்படுத்தும் என்பது அவருக்கும் தெரியும் தானே ?

பெரிய ஹீரோக்களின் படங்களுக்கு இசையமைப்பது எப்போது எதிர்பார்க்கலாம்..?

பொதுவாகவே எனக்கு யாராவது சவால் விட்டால் ரொம்பவே பிடிக்கும். .அப்போதுதான் இன்னும் முனைப்புடன் நம்மால் செயல்பட முடியும். நாம் பார்க்கும் வேலை பேசப்பட வேண்டும்.. அந்த வேலைதான் நமக்கான படங்களை நம்மிடம் கொண்டுவரும்.. அப்படி வரும்போது நிச்சயம் அவர்களுடன் இணைந்து பணியாற்றுவேன்..

சாமான்யன் படத்திற்காக ஒளிப்பதிவாளர் ரவிவர்மாவின் பாடலுக்கு இசையமைத்தது பற்றி ?

அவரும் எழுத்தாளர் தான்.. ஒளிப்பதிவாளராக பணியாற்றி வருவதால் அவ்வளவாக வெளியே தெரியவில்லை நிறைய புத்தகங்களை எழுதியிருக்கிறார். தமிழ்மீது அவருக்கு நல்ல காதல் இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் அந்த பாடலை அவர் எழுதி அதற்கு நான் டியூன் போட்டது உண்மையிலேயே அருமையான விஷயம். நான் ஏற்கனவே இணைந்து பணியாற்றிய மறைந்திருந்து பார்க்கும் மர்மமென்ன படத்தின் இயக்குனர் ராகேஷ் தான் இந்த படத்திற்கும் இயக்குனர் என்பதால் ரவிவர்மனுடன் பணியாற்றும் நல்ல வாய்ப்பு கிடைத்தது..

குறும்பட தயாரிப்பில் இறங்கி விட்டீர்களே..?

உண்மைதான்.. என்னுடைய சொந்த தயாரிப்பில் குறும்படங்களை தயாரிக்கும் முயற்சியை கையில் எடுத்துள்ளேன். முதல் தயாரிப்பாக ஹிட் விக்கெட் என்கிற குறும்படம் உருவாகியுள்ளது. இதை என்னுடைய நண்பர் கபாலீஸ்வரன் இயக்கியுள்ளார். நான் இதற்கு கதை, திரைக்கதை, வசனம் எழுதியுள்ளேன். இதில் அனந்த்நாக் ஹீரோவாக நடிக்கிறார். சமீபத்தில் மல்லிப்பூ பாடல் மூலம் மிகப்பெரிய அளவில் பிரபலமான நடிகை பிரியாலயா இதில் கதாநாயகியாக நடித்துள்ளார். இவர் சிவிகுமாரின் படம் மற்றும் சந்தானத்துடன் ஒரு படத்தில் கதாநாயகியாக நடித்து வருகிறார். இந்த படத்தில் மாண்டி என்பவரை ஒளிப்பதிவாளராக அறிமுகப்படுத்தியுள்ளேன். இந்த குறும்படத்தின் போஸ்டரை ஆதி-நிக்கி கல்ராணி இருவரும் இணைந்து வெளியிட்டிருந்தனர். இதன் கேரக்டர் போஸ்டர்களை இசையமைப்பாளர் ஜிவி பிரகாஷ் குமார் வெளியிட்டிருந்தார். அவர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த படத்தின் ட்ரைலர் விரைவில் வெளியாக இருக்கிறது. நவம்பர் மாத இறுதியில் இந்த ஹிட் லிஸ்ட் குறும்படத்தை வெளியிட இருக்கிறோம். இதையடுத்து புதிய குறும்படத்தை உருவாக்கும் பணிகள் துவங்கப்பட இருக்கிறது. வழக்கமான குறும்படங்கள் போல அல்லாமல் புதிய பாணியில் அவற்றை உருவாக்குவதே எனது நோக்கம். அப்படிப்பட்ட குறும்படத்திற்கான விருப்பம் உள்ளவர்கள் தாராளமாக அணுகலாம்".

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# இந்தியன் வங்கியின் காலாண்டு/அரையாண்டிற்கான நிதிநிலை முடிவுகள் வங்கியின் உலகளாவிய வர்த்தகம் உயர்ந்து 10.27 இலட்சம் கோடியை எட்டியது

சென்னை, நவம்பர் 07 2022: நிகர லாபம் ஆண்டிற்கு ஆண்டு எனும் அடிப்படையில் 12% உயர்ந்து ₹1225 கோடியாகநிலவுகிறது. இது செப் 21ல் ₹1089 கோடி ஆகும்

இயக்க லாபம் செப் 22ல் 11% வளர்ச்சி ஆ-ஆ எனும் அடிப்படையில் இது ' 3629கோடி. இது ₹3276 கோடி செப் 21ல். ஆகும்

நிகர வட்டி வருவாய் செப் 22ல் 15% வளர்ச்சி ஆ - ஆ எனும் அடிப்படையில் இது ' 4684கோடி. இது ₹4084 கோடி செப் 21ல். ஆகும்

கட்டணம் மீது ஆதாரப்பட்டிருக்கும் வருவாய் ஆ-ஆ எனும் அடிப்படையில் இது 18% அதிகரிப்பு. செப் 22ல் இது ₹723 கோடி

செலவுக்கும் வருவாய்க்குமான விகிதம் 44.27% செப் 22ல். இது செப் 21ல் 45.85% ஆகும்

உள்நாட்டு நிகர வட்டி மார்ஜின் செப் 22வில் 3.20 % . இது செப் 21ல் 2.89% ஆகும் சொத்துக்களின் மீதான வருவாய் (ஆர் ஓ ஏ) செப் 22ல் உள்ள நிலவரம் 0.71% . இது செப் 21ல் 0.69% ஆகும்

பங்கு மூலதனத்தின் மீதான ஈட்டம் நிலவரம் செப் 22வில் 13.83%, செப் 21ல் இது 13.31%. இது 52 அடிப்படைப் புள்ளிகள் முன்னேற்றம்

கொடுக்கப்பட்ட கடன் தொகைகளில் முன்னேற்றம், (Ý-Ý எனும் அடிப்படையில் - 14% வளர்ச்சி) இது செப் 22ல் ₹437941 கோடி . இது செப் 21ல் ₹385730 கோடியாக இருந்தது.

ராம் (விவசாயம், சில்லறைக் கடன், மற்றும் எம்எஸ்எம்இ) எனும் பிரிவில் வழங்கப்பட்ட கடன்கள் 13%அதிகரிப்பு. செப் 22ல் இது ₹255256 கோடி. செப் 21ல் இது ₹226501 கோடி.

இவை முறையே 14%, 15%, 9% உயர்வு ஆகும்) இது ஆ-ஆ எனும் அடிப்படையில். ராம் (விவசாயம், சில்லறைக் கடன், மற்றும் எம் எஸ் எம் இ, இவற்றின் பங்களிப்பு உள்நாட்டு கடன் வகைகளில் 62% ஆகும்.) வீட்டு வசதிக் கடன் (அடமானக் கடனும் சேர்த்து) 11% வளர்ச்சி, வாகனக் கடன் 28% ,தனிப்பட்ட கடன் வகைகள் 26% தங்க நகைக் கடன் 19%

வைப்பு நிதிகள் வளர்ச்சி, 7% ஆண்டிற்கு ஆண்டு எனும் அடிப்படையில் செப் 22வில் வளர்ச்சி கண்டு ₹588860 கோடியாக நிலவியது

காசாவின் வளர்ச்சி 7%, இது ஆண்டிற்கு ஆண்டு எனும் அடிப்படையில் நடப்புக் கணக்குகளின் (9% ) வளர்ச்சியால் நிகழ்ந்தது சேமிப்புக் கணக்குகளின் வளர்ச்சி ஆண்டிற்கு ஆண்டு எனும் அடிப்படையில் 7% ஆகும்

காசா விகிதம் 41% ஆகும்



ஜி என் பி ஏ 226 அடிப்படைப் புள்ளிகள் (Ý - Ý எனும் அடிப்படையில்) குறைந்து, 9.56% என்று செப் 21ல் இருந்ததிலிருந்து, 7.30% என்று செப் 22 வில் ஆக நிலவியது. என்என்பிஏ 176 அடிப்படைப் புள்ளிகள் (Ý - Ý எனும் அடிப்படையில்) குறைந்து, 3.26% என்று செப் 21ல் இருந்ததிலிருந்து, 1.50% என்று செப் 22 வில் ஆக நிலவியது. ஒதுக்கீடுகளுக்கான விகிதம் (பி சி ஆர்) ஆண்டிற்கு ஆண்டு எனும் அடிப்படையில் 776 அடிப்படைப் புள்ளிகள் முன்னேற்றம். செப் 22வில் இது 91.08% மற்றும் செப் 21ல் 83.32% ஆகும்.

மூலதனப் போதுமை விகிதம் 16.15 %. சி இ டி - மி ஆண்டிற்கு ஆண்டு எனும் அடைப்படையில் 58 அடிப்படைப் புள்ளிகள் முன்னேற்றம் (அ-ஆ என்பதாக இது 12.26% ஆகும்) டயர் ஒன்று மூலதனம் 55 அடிப்படைப் புள்ளிகள் முன்னேற்றம் கண்டு 12.89% ஆக இருந்தது

நிகர லாபம் செப் 22வில் ₹ 1225 கோடி, இது ஜூன் 22ல் ₹ 1213 கோடி. இயக்க லாபம் செப் 22வில் ₹ 3629 கோடி, இது ஜூன் 22ல் ₹3564 கோடி. நிகர வட்டி வருவாய் வளர்ச்சி 3%. செப் 22வில் ₹ 4684 கோடி, இது ஜூன் 22ல் ₹ 4534 கோடி. வட்டியல்லாத வருவாய் 14% வளர்ச்சி. செப் 22வில் இது ₹1828 கோடி, ஜூன் 22ல் இது ₹1604 கோடி.

காலாண்டிற்குக் காலாண்டு எனும் அடிப்படையில் சொத்துக்களின் மீதான வருவாய் (ஆர் ஓ ஏ) 2 அடிப்படைப் புள்ளிகளில் மாற்றம் கண்டுள்ளது. இது செப் 22ல் 0.71% ஆக இருந்தது . ஜூன் 22வில் இது 0.73% ஆகும்

பங்குகளின் மீதான ஈட்ட வருவாய் செப் 22ல் 13.83% ஆகும். இது சென்ற காலாண்டில் 14.18% ஆக நிலவியது செலவுகளுக்கும் வருவாய்க்குமான விகிதம் செப் 22ல், 44.27% . இதுவே சென்ற காலாண்டில் 41.94% ஆக நிலவியது நிகர வட்டி மார்ஜின் (உள்நாடு) 10 அடிப்படைப் புள்ளிகள் காலாண்டிற்குக் காலாண்டு என்பதாக முன்னேற்றம். இது செப் 22ல் 3.20%, ஜூன் 22ல் 3.10%

முக்கிய அம்சங்கள் (அரையாண்டு செப் 22 -- ஒப்பீடு செப் 21)

நிகர லாபம் 7% ஆண்டிற்கு ஆண்டு எனும் அடிப்படையில் உயர்ந்துள்ளது. இது எச்1எஃப்ஒய்23ல் ₹2439 கோடி. இது எச்1எஃப்ஒய்22ல் ₹2271 கோடி இயக்க லாபத்தில் 8% முன்னேற்றம். இது ₹6691 கோடியிலிருந்து ₹7194 கோடி ஆக வளர்ச்சி

நிகர வட்டி மூலம் பெற்ற வருவாய் 14% வளர்ச்சி. இது ₹ 8078 கோடி யிலிருந்து உயர்ந்து ₹ 9218 கோடியாக உள்ளது.

சொத்துக்களின் மீதான வருவாயில் எந்த மாற்றமும் இல்லை. இது 0.72% ஆகும்.

பங்குகளின் மீதான ஈட்ட வருவாய் 14% ஆகும். இது எச்1எஃப்ஒய்22ல் 14.30%

செலவுகளுக்கும் வருவாய்க்குமான விகிதம் 43.14%. இது எச்1எஃப்ஒய்22ல் 43.60%

நிகர வட்டி வருவாய் (உள்நாடு) 28 அடிப்படைப் புள்ளிகள் உயர்ந்துள்ளது, ஆண்டிற்கு ஆண்டு எனும் அடிப்படையில். 2.87% லிருந்து 3.15% க்கு மாற்றம்.

வர்த்தகம்: (முக்கிய அம்சங்கள் 30 செப்டம்பர் ,2022

மொத்த வர்த்தகம் ஆண்டிற்கு ஆண்டு எனும் அடிப்படையில் 10% வளர்ச்சி கண்டு ₹1026801 கோடி எனும் நிலையை, செப் 22வில் அடைந்துள்ளது. இது செப் 21ல் ₹937202 கோடியாகும். இது ஜூன் 22 ல் ₹1009454 கோடி வழங்கப்பட்ட கடன்கள் 14% வளர்ச்சி கண்டு செப் 22வில் ₹ 437941 கோடி. இதுசென்ற வருடம் இதுவே ₹385730 கோடி. ராம் (ஆர் ஏ எம்) பிரிவு கண்ட 13% வளர்ச்சி கண்டுள்ளது. (ஆர் ஏ எம்) இதில் சில்லறைக்கடன் 14%, விவசாயம் 15% வளர்ச்சி கண்டுள்ளது. காலாண்டிற்குக் காலாண்டு என்பதாக வரிசைக் கிரமப்படிப் பார்த்தால் வளர்ச்சி 3% ஆகும்.

மொத்த டெபாசிட்டுகள் 7% வளர்ச்சி (Ý-Ý) என்பதாக செப் 22வில் ₹ 588860 கோடி. சென்ற ஆண்டு இது ₹551472 கோடி ஆகும். காலாண்டிற்குக் காலாண்டு என்பதாக வரிசைக் கிரமப்படிப் பார்த்தால் வளர்ச்சி 1% ஆகும்.

காசாவின் வளர்ச்சி 7% ஆகும் (ஆ-ஆ எனும் அடிப்படையில்). இது ₹241078 கோடி (செப் 22) மொத்த டெபாசிட்டுகளில் இதன் பங்கு 41% ஆகும்.

முன்னுரிமைக் கடன்கள் செப் 22வில் ₹158187 கோடி இது ஏ என் பி சியில் 48% ஆகும். நிர்ணயிக்கப்பட்ட வரையறை 40% வலைப்பின்னலமைப்பு

வங்கிக்கு 5728 உள்நாட்டுக் கிளைகள், இவற்றுள் ஊரகக் கிளைகள் 1940, நகர்ப்புறக் கிளைகள் 1496, 1157 முழுநகரக் கிளைகள், 1135 மெட்ரோ கிளைகள் 3 வெளிநாட்டில் உள்ள கிளைகள்.

ஏ டி எம் கள் மற்றும் பி என் ஏக்கள் 4825. முகவர்கள் 10256 ஆகும்.

எங்கள் கவனமும் அதீத ஈடுபாடும்

டிஜிட்டல் மயமாக்கலின் சகாப்தம் வங்கித் துறையின் தொழில்நுட்ப அணுகுமுறையில் முன்னுதாரண மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளது. வெவ்வேறு மாற்று அலைவரிசைகளின் வழங்குமுறைகளும், அவற்றின் செயலாற்றமும் நாளுக்கு நாள் பிரபலமடைந்து வருகின்றன. பி ஏ பி எல் (முன்-அங்கீகரிக்கப்பட்ட தனிநபர் கடன்), ஆன்லைன் கே சி சி புதுப்பித்தல், டிஜிட்டல் வைப்புகளுக்கு எதிரான ஓவர் டிராஃப்ட் , டிஜிட்டல் முறையில் முத்ரா கடன், அதன் முதன்மை திட்டத்தின் கீழ் உடனடி நகைக் கடன், போன்ற பல டிஜிட்டல் தயாரிப்புகளை வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது- "வேவ்".

(வேர்ல்ட் ஆஃப் அட்வான்ஸ்டு நிகர்னிலை அனுபவங்கள்) உடனடியாக எளிதில் அமலாகும் தடை இல்லாத மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட சலுகைகளைப் பூர்த்தி செய்ய இவை பெரிதும் உதவும். ஊடாடும் டாஷ்போர்டுடன் செயல்திறனை அவ்வப்போது மதிப்பிடுவதை நோக்கமாகக் கொண்ட புதியதலைமுறை செயல்திறன் மேலாண்மை அமைப்பையும் (பி எம் எஸ்) வங்கி உருவாக்கியுள்ளது.

# ஆர்க்கியன் கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் இன் ஆரம்ப பொது வழங்கல் நவம்பர் 09, 2022 அன்று திறக்கப்படும்

சென்னை, நவம்பர் 07 2022: ஆர்க்கியன் கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் ("ஏசிஐஎல்" அல்லது "கம்பெனி"), அதன் தலா ₹ 2 முக மதிப்புள்ள ஈக்விட்டி பங்குகளின் ("ஈக்விட்டி ஷேர்ஸ்") ஆரம்ப பொது வழங்கலை நவம்பர் 09, 2022 புதன்கிழமை அன்று திறக்க முன்மொழிகிறது. ஆரம்ப பொது வழங்களானது, ₹ 8,050 மில்லியன் ("புதிய வெளியீடு") வரையிலான புதிய ஈக்விட்டி பங்குகளின் வெளியீடு மற்றும் 16,150,000 ஈக்விட்டி பங்குகளின் விற்பனைக்கான வழங்களைக் கொண்டுள்ளது. ("விற்பனைக்கான வழங்கல்" மற்றும் புதிய வெளியீடுகளுடன் சேர்ந்து, இந்த "வழங்கல்"). ஆங்கர் முதலீட்டாளர் ஏலத் தேதி திங்கட்கிழமை, நவம்பர் 7, 2022 . இந்தச் வழங்கல் ஆனது நவம்பர் 11, 2022 வெள்ளியன்று முடிவடையும்.

இந்த வழங்களின் விலை தொகுதி, ஒரு ஈக்விட்டி பங்கிற்கு ₹ 386 முதல் ₹ 407 வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. குறைந்த பட்சம் 36 ஈக்விட்டி பங்குகளுக்கும், அதன் பிறகு 36 ஈக்விட்டி பங்குகளின் மடங்குகளுக்கும் ஏலம் எடுக்கலாம். புதிய வெளியீட்டின் நிகர வருவாயை (வீ) நிறுவனத்தால் வழங்கப்பட்ட ₹ 6,440 மில்லியன் மதிப்பிலான மாற்ற முடியாத கடனீட்டுப் பத்திரங்களை பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ மீட்பது அல்லது முன்கூட்டிய மீட்பு; மற்றும் (வீவீ ) பொது நிறுவன நோக்கங்களுக்காக மீதமுள்ள தொகை (இந்த "வழங்களின் நோக்கங்கள் ") ஆகியவற்றின் நிதியுதவிக்கு பயன்படுத்த எ ஐ சி எ ல் முன்மொழிகிறது. இந்த விற்பனைக்கான வழங்கல் , கெமிகாஸ் ஸ்பெஷாலிட்டி எல் எல் பி இன் 2,000,000 ஈக்விட்டி பங்குகள்

("நிறுவனர் விற்பனை செய்யும் பங்குதாரர்") மற்றும் 3,835,562 ஈக்விட்டி பங்குகள் வரை இந்தியா ரிசர்ஜெண்ஸ் பண்ட், திட்டம் மி, 6,478, 876 ஈக்விட்டி பங்குகள் வரை இந்தியா ரிசர்ஜெண்ஸ் பண்ட், திட்டம் மிமி, 3,835,562 ஈக்விட்டி பங்குகள் வரை பிரமல் நேச்சுரல் ரிசோர்சஸ் பிரைவேட் லிமிடெட் (ஒட்டுமொத்தமாக, "முதலீட்டாளர் விற்பனை செய்யும் பங்குதாரர்கள்"). அக்டோபர் 31, 2022 தேதியிட்ட நிறுவனத்தின் ரெட் ஹெர்ரிங் ப்ராஸ்பெக்டஸ் மூலம், தமிழ்நாடு நிறுவனங்களின் பதிவாளரிடம் சென்னையில் தாக்கல் செய்யப்பட்டு "பிஎஸ்இ" மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆஃப் இந்தியா லிமிடெட் ("என்எஸ்இ") இல் பட்டியலிட முன்மொழியப்பட்டு, இந்த ஈக்விட்டி பங்குகள் வழங்கப்படுகின்றன. வழங்களின் நோக்கங்களுக்காக, நியமிக்கப்பட்ட இந்த பங்குச் சந்தை, என் எஸ் இ ஆக இருக்கும்.

செக்யூரிட்டிஸ் அண்ட் எக்சேன்ஜ் போர்டு ஆப் இந்தியா இன்(மூலதனம் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள் ) ஒழுங்குமுறைகள் 2018 ("செபி ஐசிடிஆர் விதிமுறைகள்") 31 உடன் படிக்கப்பட்ட திருத்தப்பட்ட 1957 ஆம் ஆண்டின் செக்யூரிட்டி ஒப்பந்தங்கள் (ஒழுங்குமுறை) விதிகளின் விதி 19(2)(பி) இன் படி, புக் பில்டிங் செயல்முறையின் மூலம் இந்த வழங்கல் வழங்கப்படுகிறது. மற்றும் செபி ஐசிடிஆர் விதிமுறைகளின் 6(2) விதிமுறைகளுக்கு இணங்க, இதில் 75% க்கும் குறையாத வழங்கல் தகுதிவாய்ந்த நிறுவன வாங்குபவர்களுக்கு, ("கியூ ஐ பி கள்", "கியூ ஐ பி பகுதி") நிறுவனம் மற்றும் விற்பனை பங்குதாரர்கள், புத்தகம் இயங்கும் முன்னணி மேலாளர்களுடன் கலந்தாலோசித்து விகிதாசார அடிப்படையில் ஒதுக்கப்படும். செபி ஐ சி டி ஆர் விதிமுறைகளுக்கு இணங்க விருப்ப அடிப்படையில் கியூ ஐ பி பகுதியின் 60% வரை ஆங்கர் முதலீட்டாளர்களுக்கு ஒதுக்கலாம். ("ஆங்கர் முதலீட்டாளர் பகுதி ") அதில் மூன்றில் ஒரு பங்கு உள்நாட்டு மியூச்சுவல் ஃபண்டுகளில் இருந்து பெறப்படும் செல்லுபடியாகும் ஏலங்களுக்கு உட்பட்டு ஆங்கர் முதலீட்டாளர் ஒதுக்கீடு விலை அல்லது அதற்கு மேல் உள்நாட்டு பரஸ்பர நிதிகளுக்கு ஒதுக்கப்படும்.

மேலும், கியூ ஐ பி பகுதியின் 5% (ஆன்கர் முதலீட்டாளர் பகுதியைத் தவிர்த்து) ("நிகர கியூ ஐ பி பகுதி") பரஸ்பர நிதிகளுக்கு மட்டுமே விகிதாச்சார அடிப்படையில் ஒதுக்கீடு செய்யக் கிடைக்கும், மற்றும் நிகர கியூ ஐ பி பகுதியின் எஞ்சிய பகுதியானது, வழங்கும் விலையில் அல்லது அதற்கு மேல் பெறப்படும் செல்லுபடியாகும் ஏலங்களுக்கு உட்பட்டு, பரஸ்பர நிதிகள் உட்பட அனைத்து கியூ ஐ பி களுக்கும் விகிதாசார அடிப்படையில் ஒதுக்கீடு செய்யக் கிடைக்கும். இருப்பினும், மியூச்சுவல் ஃபண்டுகளின் மொத்த தேவை நிகர கியூ ஐ பி பகுதியில் 5% க்கும் குறைவாக இருந்தால், மியூச்சுவல் ஃபண்ட் பகுதியில் ஒதுக்குவதற்குக் கிடைக்கக்கூடிய இருப்பு ஈக்விட்டி பங்குகள், கியூ ஐ பி களுக்கு விகிதாசார ஒதுக்கீட்டிற்காக மீதமுள்ள நிகர கியூ ஐ பி பகுதியுடன் சேர்க்கப்படும். மேலும், நிறுவனம் அல்லாத ஏலதாரர்களுக்கு ஒதுக்கீடு செய்ய வழங்களின் 15% க்கு மேல் கிடைக்காது, அதில் (அ) மூன்றில் ஒரு பங்கு ஏல அளவு, ₹200,000 மற்றும் ₹1,000,000 வரை உள்ள விண்ணப்பதாரர்களுக்கு ஒதுக்கப்படும்; மற்றும் (ஆ) ₹1,000,000க்கு மேல் ஏலத்தொகை கொண்ட விண்ணப்பதாரர்களுக்கு மூன்றில் இரண்டு பங்கு ஒதுக்கப்படும், அப்படியானால், அத்தகைய துணைப்பிரிவுகளில் ஒன்றில் குழுசேராத பகுதியானது நிறுவனமற்ற ஏலதாரர்களுக்கு நிறுவனமற்ற பகுதியின் ("நிறுவனம் அல்லாத பகுதி") மற்ற துணைப்பிரிவில், வழங்கல் விலையில் அல்லது அதற்கு மேல் பெறப்படும் செல்லுபடியாகும் ஏலங்களுக்கு உட்பட்டு ஒதுக்கப்படலாம்., மேலும் 10% க்கும் அதிகமான வழங்கல்கள் செபி ஐ சி டி ஆர் விதிமுறைகளின்படி, வழங்கல் விலையில் அல்லது அதற்கு மேல் பெறப்படும் செல்லுபடியாகும் ஏலங்களுக்கு உட்பட்டு, ஆர் ஐ பி களுக்கு ஒதுக்கீடு செய்யக் கிடைக்காது.

அனைத்து சாத்தியமான ஏலதாரர்களும் (ஆன்கர் முதலீட்டாளர்களைத் தவிர) தங்களுக்குரிய எ எஸ் பி எ கணக்குகளின் விவரங்களை வழங்கும் ("எ எஸ் பி எ") அப்ளிகேஷன் சப்போர்ட்டட் பை ப்ளாக்ட் அமௌண்ட் ("எ எஸ் பி எ") ஐ கட்டாயமாகப் பயன்படுத்த வேண்டும், மேலும் யு பி ஐ மென்பொருளைப் பயன்படுத்தும் யு பி ஐ ஏலதாரர்களின் விஷயத்தில் யு பி ஐ ஐடி, பொருந்தினால், இதில் தொடர்புடைய ஏலத் தொகைகள் எஸ் சி எஸ் பி களால் அல்லது யு பி ஐ பொறிமுறையின் கீழ் ஸ்பான்சர் வங்கிகளால் அந்தந்த ஏலத் தொகைகளின் அளவிற்கு முடக்கப்படும் , ஆங்கர் முதலீட்டாளர்கள் எ எஸ் பி எ செயல்முறை மூலம் வழங்களில் பங்கேற்க அனுமதிக்கப்படுவதில்லை . விவரங்களுக்கு, ஆர் எச் பி இன் பக்கம் 367 இல் உள்ள "வழங்கல் நடைமுறை" ஐப் பார்க்கவும்.

ஐ ஐ எ ஃ ப் எ ல் செக்யூரிட்டீஸ் லிமிடெட், ஐசிஐசிஐ செக்யூரிட்டீஸ் லிமிடெட் மற்றும் ஜேஎம் பைனான்சியல் லிமிடெட் ஆகியவை இந்த வழங்களின் புத்தக இயக்க முன்னணி மேலாளர்கள் ஆவர்.

# ஐஸ்வர்யா ரஜினிகாந்த் இயக்கும் 3-வது படமமான லால் சலாம் பூஜையுடன் துவங்கியது 3-வது முறையாக இயக்குனர் தொப்பியை அணியும் ஐஸ்வர்யா ரஜினிகாந்த்




சென்னை, நவம்பர் 07 2022: கடந்த 2012ல் 3 படம் மூலம் இயக்குனராக அறிமுகமான ஐஸ்வர்யா ரஜினிகாந்த் அடுத்ததாக 2015ல் கௌதம் கார்த்திக் நடிப்பில் வை ராஜா வை என்கிற படத்தை இயக்கினார். இந்த நிலையில் தற்போது மீண்டும் மூன்றாவது முறையாக டைரக்ஷனில் இறங்கியுள்ளார் ஐஸ்வர்யா ரஜினிகாந்த் . அவர் இயக்கவுள்ள புதிய படம் குறித்து அறிவிப்பு தற்போது வெளியாகியுள்ளது.

லைகா புரொடக்ஷன்ஸ் சார்பில் சுபாஸ்கரன் தயாரிக்கும் இந்தப்படத்தில் விஷ்ணு விஷால் மற்றும் விக்ராந்த் இருவரும் இணைந்து கதாநாயகர்களாக நடிக்கின்றனர்.

'லால் சலாம்' என பெயரிட்டுள்ள இப்படத்தில் சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்த் சிறப்பு தோற்றத்தில் நடிக்க உள்ளார். இந்த படத்திற்கு விஷ்ணு ரங்கசாமி ஒளிப்பதிவு செய்கிறார். மேலும் கலை இயக்குனராக ராமு தங்கராஜ் மற்றும் படத்தொகுப்பாளராக பி. பிரவீண் பாஸ்கர் ஆகியோர் இந்த படத்தில் பணியாற்ற உள்ளனர். தயாரிப்பு மேற்பார்வை சேது பாண்டியன் , நிர்வாக தயாரிப்பாளர் ஶ்ரீ சுப்ரமணியன் . இந்த படத்தில் நடிக்கும் மற்ற நடிகர்கள் மற்றும் இதர தொழில்நுட்ப குழுவினர்கள் குறித்த விபரங்கள் விரைவில் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட உள்ளது.

லால் சலாம் படத்தின் படப்பிடிப்பு விரைவில் தொடங்கும் என்று head of lyca production gkm தமிழ் குமரன் தெரிவித்தார் .

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



## ஸ்டார் ஹெல்த், குழந்தை புற்றுநோய் உயிர்பிழைத்தவர்களுக்கு காப்பீட்டை விரிவுபடுத்துகிறது அவர்களுடைய உடன்பிறப்புகளுக்கு காப்பீட்டை அளிக்க முன்மொழிகிறது



சென்னை, நவம்பர் 07 2022: ஸ்டார் ஹெல்த் அண்ட் அலைட் இன்சூரன்ஸ், செயின்ட் ஜூட்ஸ் உடன் இணைந்து, செயின்ட் ஜூட்ஸ் ஃபார் லைப் எனும் செயின்ட் ஜூட்ஸ் திட்டத்தின் கீழ், புற்றுநோயைக் கண்டறிந்து சிகிச்சை பெற்ற குழந்தைகளுக்கு காப்பீடு வழங்கி ஓராண்டு நிறைவடைந்ததை இன்று குறிக்கிறது. இத்திட்டத்தின் மூலம், இந்த ஆண்டு, கூடுதலாக 500 குழந்தைகளை சேர்க்க காப்பீட்டாளர் இலக்கு வைத்துள்ளார். புற்றுநோயில் இருந்து தப்பிய குழந்தைகளின் உடன்பிறப்புகளுக்கு விரைவில் காப்பீடு வழங்குவதாக ஸ்டார் ஹெல்த் அறிவித்தது. வடிவமைக்கப்பட்டுள்ள இந்த புதிய பாலிசி, இந்த குழந்தைகளுக்கு உடல்நலம் மற்றும் விபத்து காப்பீட்டை வழங்கும்.

ஆரம்பத்தில் திருமதி ராணி விகாஜியின் நினைவாக நிறுவப்பட்ட இந்த தனித்துவமான முயற்சி, ஒரு வருடத்திற்கு முன்பு அதாவது நவம்பர் 4, 2021 அன்று தொடங்கப்பட்டது, மேலும் இந்தியா முழுவதும் செயின்ட் ஜூட்ஸைச் சேர்ந்த 326 குழந்தைகளை உள்ளடக்கியது. இந்தத் திட்டத்தில் மருத்துவ காப்பீட்டின் கீழ் 270 குழந்தைகளும், விபத்துக் காப்பீட்டின் கீழ் அனைத்து 326 குழந்தைகளும் சேர்க்கப்பட்டனர். கடந்த ஆண்டு 300க்கும் மேற்பட்ட ஜூடியன்களுக்கு (புற்றுநோயிலிருந்து தப்பிய குழந்தை பராமரிப்பு மையத்தின் குழந்தைகள்) வழங்கப்பட்ட பாலிசிகளுக்கு, ஸ்டார் ஹெல்த் தொடர்ந்து உத்தரவாதமாய் இருக்கும்.

இந்த முயற்சியானது, ஸ்டார் ஹெல்த் நிறுவனத்தின் ஒரு முக்கிய எல்லையாக இருக்கிறது மற்றும் மருத்துவ காப்பீடு கவரேஜில் அதிகம் கவனிக்கப்படாத இடைவெளியில் கவனம் செலுத்துகிறது. தி ரோட்டரி கிளப் ஆஃப் மெட்ராஸ் டெம்பிள் சிட்டி, இந்த கூட்டாண்மையை எளிதாக்குவதில் முக்கிய பங்கு வகித்தது மற்றும் செயின்ட் ஜூட்ஸில் குழந்தைகளின் நலனுக்காக தொடர்ந்து பணியாற்றி வருகிறது.

“புற்றுநோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் குழந்தைகளுக்கு நேர்மறை மற்றும் வளர்ப்புச் சூழலை வழங்கும் அற்புதமான பணியைச் செய்து வரும் செயின்ட் ஜூட்ஸுடனான எங்கள் தொடர்பின் ஒரு முழு ஆண்டு நிறைவை, இன்று குறிக்கிறது. இந்தக் காப்பீடு திட்டமானது, இந்த தகுதியுள்ள குழந்தைகளுக்கு, சாதாரண வாழ்க்கையை எளிதாக அணுக உதவுகின்ற மருத்துவப் பாதுகாப்பை வழங்கியுள்ளது,

புற்று நோய்க்கு எதிரான போர்வீரர்களுக்கு மட்டுமின்றி அவர்களது உடன்பிறப்புகளுக்கும் ஆதரவளிப்பதன் மூலம், இந்த ஆண்டு எங்கள் கூட்டாண்மையை விரிவுபடுத்துகின்றோம், இதனால் பெற்றோர்கள் மற்றும் குழந்தைகள் அவர்களின் எதிர்காலத்தில் கவனம் செலுத்த முடியும். சமூகத்தின் பெரும்பாலும் கவனிக்கப்படாத இந்தப் பிரிவை உள்ளடக்கியதில் நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம். ” என்று ஸ்டார் ஹெல்த் அண்ட் அலைட் இன்சூரன்ஸ் கோ. லிமிடெட் இன் எம்.டி.டாக்டர் எஸ். பிரகாஷ் கூறினார்.


செயின்ட் ஜூட்ஸ் ஃபார் லைஃப், புற்றுநோய்க்கு எதிரான போரில் வெற்றி பெற்ற, ஜூடியன்கள் என்று குறிப்பிடப்படும், குழந்தைகளுக்கு தொடர்ந்து ஆதரவை வழங்குவதன் மூலம் அவர்களின் திறனை நிறைவேற்ற முடியும் என்று உறுதி செய்கிறது. அந்தத் நோக்கத்தில் அவர்களுக்கு உடல்நலக் காப்பீடு மற்றும் விபத்துக் காப்பீடு வழங்குவது ஒரு முக்கியமான படியாகும்.

"செயின்ட் ஜூட்ஸில், ஜூடியன்கள் என்று பெருமையுடன் அழைக்கப்படும் எங்களின் அனைத்து முன்னாள் மாணவர்களுக்கும், அவர்களின் கல்வியை முடிக்கவும், நல்ல ஆரோக்கியத்தைப் பேணவும், வெற்றிகரமான வாழ்க்கையை நடத்தவும் அவர்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கு, சரியான நேரத்தில் மற்றும் பொருத்தமான உதவி

கிடைப்பதை உறுதிசெய்வதை நாங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளோம். அவர்களுக்கு மருத்துவக் காப்பீடு மற்றும் விபத்துக் காப்பீடு வழங்குவது, அந்த நோக்கத்தில் மிகவும் அவசியமான முக்கியமான படியாகும். குழந்தை புற்றுநோயால் உயிர்பிழைத்தவர்கள் இளம் வயதினர் ஆவர் மேலும் அவர்களுக்கு முன்னால் ஒரு நீண்ட வாழ்க்கையை கொண்டுள்ளனர். இந்த மருத்துவக்காப்பீடு, அவர்களுக்கு பாதுகாப்பு உணர்வுடன் நிறைவான வாழ்க்கையை நடத்துவதற்கும், அவர்களின் இலக்குகள் மற்றும் அபிலாஷைகளை நோக்கி எந்தவித அச்சமும் இல்லாமல் செயல்படவும் உதவுகிறது. இந்த திட்டத்தின் வெற்றிகரமான ஒரு வருடத்தில் நாங்கள் மிகுந்த பெருமையும் மகிழ்ச்சியும் கொள்கிறோம்,” என்று செயின்ட் ஜூட்ஸின் சி ஈ ஓ அனில் நாயர் கூறினார்.

இந்த முயற்சி குறித்து, ரோட்டரி கிளப் ஆஃப் மெட்ராஸ் டெம்பிள் சிட்டியின் அங்கீகாரத் தலைவர் டாக்டர் ரேகா ஷெட்டி கூறுகையில், “சென்னை மற்றும் வேலூரில் உள்ள செயின்ட் ஜூட்ஸுடன் முதல் நாளிலிருந்தே இணைந்திருப்பது ஒரு பாக்கியமாக உள்ளது. புற்றுநோயிலிருந்து தப்பிய குழந்தைகளுக்கான இந்த காப்பீடு, உலக அளவில் கூட தனித்துவமானது மற்றும் சிறப்பு வாய்ந்தது. மெட்ராஸ் டெம்பிள் சிட்டியின் ரோட்டரி கிளப், ஸ்டார் ஹெல்த் அண்ட் அலைட் இன்சூரன்ஸ் கோ. லிமிடெட் உடன் இணைந்து, அதன் தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி திரு. வி. ஜகந்நாதன் மற்றும் அதன் நிர்வாக இயக்குநர் டாக்டர் எஸ் பிரகாஷ் மூலம் இதை எளிதாக்கியதில் பெருமை கொள்கிறது." என்றார்.

## இந்தியாவுக்கு கச்சா எண்ணெய் விற்பனையில் ரஷியா முதலிடம்




சென்னை, நவம்பர் 07 2022: இந்தியாவுக்கு கச்சா எண்ணெய் விற்பனையில் ரஷியா முதலிடத்தில் உள்ளது.

கடந்த 2021-2022 நிதிஆண்டில் இந்தியா கொள்முதல் செய்த மொத்த கச்சா எண்ணெயில் ரஷியாவிடம் இருந்து வாங்கியது, வெறும் 0.2 சதவீதம் மட்டுமே.

ஆனால், கடந்த அக்டோபர் மாதத்தில், இந்தியா வாங்கிய மொத்த கச்சா எண்ணெயில் ரஷியா விற்பனை செய்தது 22 சதவீதமாக உயர்ந்துள்ளது. வழக்கமாக அதிகமான கச்சா எண்ணெய் விற்பனை செய்து வந்த ஈராக், சவுதி அரேபியா ஆகியவை 2 மற்றும் 3-வது இடங்களுக்கு தள்ளப்பட்டுள்ளன.

அக்டோபர் மாதத்தில், நாள் ஒன்றுக்கு 9 லட்சத்து 35 ஆயிரத்து 556 பீப்பாய்கள் வீதம் இந்தியாவுக்கு ரஷியா விற்பனை செய்துள்ளது.

உக்ரைன் மீது போர் தொடுத்ததால், ரஷியா மீது மேலை நாடுகள் பொருளாதார தடை விதித்தன. எனவே, ரஷியா தள்ளுபடி விலையில் கச்சா எண்ணெய் விற்க முன்வந்தது. அதை பயன்படுத்தி, ரஷியாவிடம் அதிக அளவில் கச்சா எண்ணெயை இந்தியா இறக்குமதி செய்துள்ளது.

## குறைபாடுள்ள மண்ணீரல் இதய செயலிழப்பை ஏற்படுத்தும் வாய்ப்புள்ளது

### பேராசிரியர் டாக்டர். கபாலி நீலமேகம் எச் ஓ டி மற்றும் இரைப்பை, குடல் அறுவை சிகிச்சை நிபுணர், ஃபோர்டிஸ் மலர், அடையார்

சென்னை, நவம்பர் 07 2022: நம் உடலில் உள்ள அனைத்து உறுப்புகளும் சரியாக செயல்பட்டால் தான் நோயின்றி வாழ முடியும். மூளை, நுரையீரல், இதயம் மற்றும் சிறுநீரகம் தவிர, மண்ணீரலும் மனித உறுப்புகளில் மிக முக்கியமான ஒன்றாகும். நமது உடலில் கல்லீரலுக்கு மிக அருகில் இருப்பது மண்ணீரல். நிணநீர் உறுப்புகளில், இது உடலின் மிகப்பெரிய உறுப்பு ஆகும். இது நார்ச்சத்து பிணைய கட்டமைப்பிற்குள் உள்ள ரெட்டிகுலர் செல்களால் ஆனது.

இது ஒப்பீட்டளவில் சிறியதாக இருந்தாலும், நிமோனியா மற்றும் மூளைக்காய்ச்சலை ஏற்படுத்தும் சில வகையான பாக்டீரியாக்களை எதிர்த்துப் போராடுவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. மண்ணீரல் மக்களிடையே அளவு மற்றும் வடிவத்தில் வேறுபடுகிறது, ஆனால் இது பொதுவாக முஷ்டியின் அளவு, ஊதா நிறம் மற்றும் நான்கு அங்குல நீளம் கொண்டது. இது வயிற்றின் இடதுபுற மேற்புறத்தில் உள்ள உறுப்பு ஆகும்.

மண்ணீரலின் முக்கிய செயல்பாடுகள்

மண்ணீரலின் முக்கிய செயல்பாடுகள் என்னவென்றால் இரத்தத்தை உருவாக்குதல், சேமித்தல், வடிகட்டுதல் மற்றும் நோயெதிர்ப்பு திறனை உருவாக்குதல். பழைய இரத்த சிவப்பணுக்கள் மண்ணீரலில் மறுசுழற்சி செய்யப்படுகின்றன; பிளேட்லெட்டுகள் மற்றும் வெள்ளை இரத்த அணுக்கள் அங்கு சேமிக்கப்படுகின்றன.

மண்ணீரல் மனிதனின் பலவித எண்ணங்களையும் உருவாக்கி ஊக்கப்படுத்துகிறது; எனவே இது மன வளர்ச்சியிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. முதிர்ந்த இரத்த சிவப்பணுக்களை அழிப்பது, உடல் மற்றும் நரம்பு மண்டலத்தைத் தூண்டுவது, இதயம் மற்றும் மூளையின் செயல்பாடுகளை சீராக வைத்திருப்பது மண்ணீரலின் முதன்மைப் பணிகளாகும். மண்ணீரல் ஆரோக்கியமாக பராமரிக்கப்படாவிட்டால் இதயம் தொடர்பான நோய்கள் உருவாக வாய்ப்புள்ளது. சில நேரங்களில் இது உயர் இரத்த அழுத்தத்தை ஏற்படுத்தும், அதன் விளைவாக மாரடைப்பு ஏற்படலாம். இது இரத்தத்தில் உள்ள தேவையற்ற நுண்ணுயிரிகளை அழித்து சிறுநீரக செயல்பாட்டையும் தூண்டுகிறது.

இதேபோல், மண்ணீரல் இரத்த ஓட்டத்தில் இருந்து கிருமிகள் போன்ற வெளி உயிரினங்களை வடிகட்டுவதற்கான ஒரு உறுப்பாகவும் செயல்படுகிறது.

மண்ணீரல் செய்யும் மற்ற முக்கியப் பணி இரத்தம் மூலம் பரவும் நோய்களுக்கு எதிராக நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பது மற்றும் வியர்வை சுரப்பிகளைத் தூண்டுவது ஆகும்.

மண்ணீரலில் ஏற்படும் கோளாறுகள்

விரிவடைந்த மண்ணீரல் ஹைப்பர்ஸ்ப்ளெனிசத்திற்கு வழிவகுக்கிறது, இது அதீத செயல் நிலை கொண்ட நிலை ஆகும். நீங்கள் அதிகம் சாப்பிடாவிட்டாலும், விரிவடைந்த மண்ணீரல் வலி மற்றும் வயிறு நிறைந்த மாதிரி சங்கடமான உணர்வை ஏற்படுத்தும். ஸ்ப்லீனோமெகலி ஒரு ஆபத்தான நிலை, ஏனெனில் இந்த நிலையில் மண்ணீரல் கிழிந்து இரத்தக்கசிவு ஏற்படலாம். கல்லீரல் தொடர்பான பிரச்சனைகள் மண்ணீரல் பெரிதாக இருப்பதற்கு முக்கிய காரணங்களில் ஒன்றாகும்.

சிதைந்த மண்ணீரல் என்பது மண்ணீரலில் உள்-இரத்தப்போக்கு இருக்கும்போது ஏற்படும் ஒரு நிலை. மலேரியா மற்றும் இதர தொற்று நோய்களான மோனோநியூக்ளியோசிஸ் போன்ற சில நோய்கள் மண்ணீரலை வீங்குவதற்கும், அதன் பாதுகாப்பு கவசம் மெலிவதற்கும் காரணமாக அமைகிறது.

த்ரோம்போசைட்டோபீனியா என்பது மண்ணீரல் தேவைக்கு அதிகப்படியான பிளேட்லெட்டுகளை சேமிக்கும் ஒரு நிலை. பிளேட்லெட்டுகள் இல்லாமல், காயம் அல்லது வெட்டு ஏற்பட்ட இடத்தில் இரத்தம் விரைவாக உறையாது. இது அதிகப்படியான இரத்த இழப்பை ஏற்படுத்துகிறது.

மண்ணீரல் அழற்சி என்பது மண்ணீரலுக்கு இரத்த விநியோகம் குறையும் போது ஏற்படும் ஒரு நிலை. இது பெரும்பாலும் வலி நிறைந்ததாக இருக்கும்.

மண்ணீரல் சேதத்தின் அறிகுறிகள்

வேகமாக இதயத்துடிப்பு, குமட்டல், தலைச்சுற்றல், எடை அதிகரிப்பு மற்றும் அடிவயிற்றில் பயங்கர வலி, உலர்ந்த மற்றும் கடினமான நாக்கு ஆகியவை மண்ணீரலின் சிதைவின் அறிகுறிகளாகும். மற்ற அறிகுறிகள் முழு உடலிலும் வலி, கால்கள் வீக்கம், சாப்பிட்ட உடன் தூக்கம் வருதல், எப்போதும் சோர்வாக உணர்தல் மற்றும் மஞ்சள் காமாலை ஆகியவை அடங்கும். சில நேரங்களில் இரத்த அழுத்தம் மற்றும் சிறுநீர் அடங்காமை அதிகரிக்கும்.

மண்ணீரல் சேதத்திற்கான காரணங்கள்

மூ அடிக்கடி கோபம் மற்றும் எரிச்சல் அடைபவர்களுக்கு மன அழுத்தம் உள்ளவர்களுக்கும் மண்ணீரல் பாதிக்கப்படும்.

மூ மதுப்பழக்கம், புகைபிடித்தல் போன்றவற்றால் இந்நோய் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

மூ இரத்தத்தில் பித்த நீர் அதிகரிப்பதால், மண்ணீரலில் பாதிப்பு ஏற்படுகிறது.

மூ இதயம் இரத்தத்தை உறிஞ்சுவது போல் மண்ணீரலும் இரத்தத்தை உறிஞ்சுதல் மூ கல்லீரல் அழற்சி, வயிற்றில் புண், பித்தப்பை மற்றும் குடல் ஆகியவற்றால் மண்ணீரல் பாதிக்கப்படலாம்.

சிகிச்சை முறைகள் சிகிச்சையானது சீர்குலைவு மற்றும் தீங்கின் தீவிரத்தை பொறுத்துள்ளது. தீவிரமில்லா நிலையில் மதுவை தவிர்த்தல் மற்றும் உணவில் சில மாற்றங்கள் கொண்டு சிகிச்சை அளிக்கலாம். சிதைந்த மண்ணீரல் அல்லது விரிவடைந்த மண்ணீரலுக்கு அறுவை சிகிச்சை மூலம் அகற்றப்படுவது பொதுவான சிகிச்சை ஆகும். இந்த சிறிய உறுப்பு மிக முக்கியமான பணிகளைச் செய்தாலும், மண்ணீரல் இல்லாமல் வாழ முடியும். நிணநீர் கணுக்கள் மற்றும் கல்லீரல் போன்ற பிற திசுக்கள் மண்ணீரலின் பணிகளைச் செய்ய முடியும். இருப்பினும், மண்ணீரல் அகற்றப்பட்டவர்களுக்கு நோய்த்தொற்றுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம். நோயெதிர்ப்பு மண்டலத்தை பாதிக்கும் பிற நோய்களைக் கொண்டவர்கள் சீக்கிரம் நோய் தொற்றுக்கு உள்ளாக வாய்ப்புள்ளது.

ஆரோக்கியமான மண்ணீரலுக்கு மருத்துவரின் ஆலோசனை

நீங்கள் ஆரோக்கியமான மண்ணீரல், நிணநீர் மண்டலம் மற்றும் நோயெதிர்ப்பு அமைப்பு சரியாக செயல்படுவதை உறுதிசெய்ய, ஒருவர் நிறைய தண்ணீர் குடிக்க வேண்டும், தவறாமல் உடற்பயிற்சி செய்ய வேண்டும் மற்றும் ஆரோக்கியமான எடையை பராமரிக்க வேண்டும். பழங்கள் மற்றும் காய்கறிகள் போன்றவற்றை சீரான மற்றும் போதுமான அளவு உட்கொள்வதன் மூலம் வெளிப்புற தொற்று மற்றும் நோய்களிலிருந்து பாதுகாக்கும் நோயெதிர்ப்பு சக்தியை நன்றாக பராமரிக்க முடியும்.

மண்ணீரலை வலுப்படுத்த உதவும் சில காய்கறிகள், கீரைகள், கேரட், பீட்ரூட், வெள்ளரி, முள்ளங்கி, புதினா, பூண்டு, தேங்காய், முளைவிட்ட தானியங்கள் மற்றும் சின்ன வெங்காயம். கொய்யா, திராட்சை, ஆரஞ்சு, அன்னாசி, பப்பாளி, மாதுளை, அத்திப்பழம், ஸ்ட்ராபெர்ரி, பிளம்ஸ் போன்ற பழங்கள் மண்ணீரலை ஆரோக்கியமாக பராமரிக்க உதவுகின்றன. இந்த காய்கறிகள் மற்றும் பழங்களில் உள்ள மெத்தியோனைன் இரத்த சிவப்பணுக்களின் உற்பத்தியிலும், மண்ணீரல் மற்றும் பித்த சுரப்பிகளின் செயல்பாட்டிலும் முக்கிய பங்கு வகிக்கிறது.

சிறியதாக இருந்தாலும், மண்ணீரல் ஒரு முக்கியமான உறுப்பு. இது தொற்றுநோய்களை எதிர்த்துப் போராடவும், பழைய அல்லது சேதமடைந்த இரத்த அணுக்களை அகற்றவும், உங்கள் உடலில் திரவங்களை சீராக பரவ வைக்க கடினமாக உழைக்கிறது. பல கோளாறுகள், நோய்த்தொற்றுகள், காயங்கள் மற்றும் நோய்கள் மண்ணீரலில் சிக்கல்களை ஏற்படுத்தலாம் மற்றும் மண்ணீரலின் ஆரோக்கியமான பராமரிப்பு ஆரோக்கியமான வாழ்க்கைக்கு உதவும்.

